**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**

**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2024 ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண்.3/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.117/2019**

ச.லீலாவதி ... **மனுதாரர்/வாதி**

... எதிர் ...

1.நா.ஆனந்தன்

2. ஆ.தேவி (இறப்பு)

3. சந்துரு .... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு என்முன்பு 14.10.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், மனுதார் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 6 ரூல். 17 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

தாவா வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தேவி என்பவர் கடந்த 28.11.2022ம் தேதி காலமாகிவிட்டார். இம்மனுவில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் ஆனந்தன் என்பவரும், அவர் மகன் சந்துரு என்பவரும் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி வாரிசுகளில் சந்துரு என்பவரை வழக்கில் 3ம் பிரதிவாதியாக

சேர்த்துக்கொள்ள வேண்டி அசல் பிராதினை சீர்திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்பதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4**. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் இல்லை.

**5. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.2/2023 அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் Consequential Amendment ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு அக்டோபர் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.S.முகம்மது யூசுப் நவாஸ், 14.10.24
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை
**ஏதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ஒம்/திரு.ளு.முகம்மது யூசுப் நவாஸ், 14.10.24
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

District Munsif Court

Manamadurai

IA 3/2024

in

OS 117/2019

Order

14.10.2024